**செ. கு. எண்: 144** **நாள்: 02.11.2019**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி**
அவர்களின் அறிக்கை – 2.11.2019

கோயம்புத்தூர் மாவட்டம், பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம், ஆழியாறு படுகை 'ஆ' மண்டலத்தின் பொள்ளாச்சி கால்வாய் 'ஆ' மண்டலம், வேட்டைக்காரன்புதூர் கால்வாய் 'அ' மண்டலம், சேத்துமடைக் கால்வாய் 'ஆ' மண்டலம் மற்றும் ஆழியாறு ஊட்டுக் கால்வாய் 'ஆ' மண்டலம் ஆகியவற்றின் பாசனப் பகுதிகளுக்கு ஆழியாறு அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடக் கோரி பரம்பிக்குளம் ஆழியாறு திட்ட ஆழியாறு படுகை புதிய ஆயக்கட்டு பாசன விவசாயிகள் சங்கத்தினர் உள்ளிட்ட வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.

கோயம்புத்தூர் மாவட்டம், பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் ஆழியாறு படுகை புதிய ஆயக்கட்டு பாசன விவசாயிகள் சங்கத்தினர் உள்ளிட்ட வேளாண் பெருங்குடி மக்களின் வேண்டுகோளினை ஏற்று, கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆழியாறு அணையிலிருந்து ஆழியாறு படுகை 'ஆ' மண்டலத்தின் பொள்ளாச்சி கால்வாய் 'ஆ' மண்டலம், வேட்டைக்காரன்புதூர் கால்வாய் 'அ' மண்டலம் சேத்துமடைக் கால்வாய் 'ஆ' மண்டலம் மற்றும் ஆழியார் ஊட்டுக் கால்வாய் 'ஆ' மண்டல பாசனப் பகுதிகளுக்கு 4.11.2019 முதல் உரிய இடைவெளி விட்டு 70 நாட்களுக்கு மொத்தம் 2250 மி.க.அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால் கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி மற்றும் ஆனைமலை வட்டங்களில் உள்ள 22,332 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**